**தலைப்பு 117 - உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 117 - உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 06 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தீயோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 207,410.98 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 187,640.36 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 19,770.62 மில்லியன் அதாவது 9.53 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 5,869.87 | 5,601.60 | 268.27 | 4.57 |
| மூலதனம் | 201,541.11 | 182,038.76 | 19,502.35 | 9.68 |
| மொத்தம் | 207,410.98 | 187,640.36 | 19,770.62 | 9.53 |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 11701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 50.00 | 19.57 | 10.00 | 24.86 | 70.00 | 34.81 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள 04 கட்டுநிதிக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 49.98 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கட்டுநிதிக் கணக்குகளின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 7003/0000/00/0054/0015/000 | 1.94 |
| 7002/0000/00/0332/0015/000 | 0.04 |
| 7002/0000/00/0438/0015/000 | 0.87 |
| 7002/0000/00/0084/0015/000 | 47.14 |
| மொத்தம் | 49.99 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 811.33 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0176/000 | 0.12 |
| 6000/0000/00/0013/0135/000 | 91.62 |
| 6000/0000/00/0016/0123/000 | 671.10 |
| 6000/0000/00/0017/0033/000 | 20.37 |
| 6000/0000/00/0020/0021/000 | 28.12 |
| மொத்தம் | 811.33 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரணகள்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் கட்டுநிதி வழங்கப்படாமையினால் 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 29 சதவீதம் மற்றும் 79 சதவீத நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 3.3 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களை விஞ்சிய (காணி வைப்புத் தவிர) ரூபா 36,638,763 கூட்டுத் தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் அடுத்துவரும் 05 மாதங்களில் செலுத்துவதற்குள்ள வைப்புக்கள் தவிர எஞ்சிய வைப்புக்கள் பொதுத் திறைசேரியின் வைப்புக் கணக்கில் செலவு வைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நெடுஞ்சாலைகள் பிரிவில் அந்த வைப்பு மீதி 475 வைப்பு உரிமையாளர்களை உள்ளடக்கியிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 30,312,903 ஆகும்.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

11701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,109,833 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 02 வருடங்கள் முதல் 23 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) நிலுவைக் கடன் மீதியில் காணப்பட்ட மரணித்த, ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நீண்டகாலமாகக் கொண்டுவரப்படுகின்ற கடன் மீதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சிலிருந்து பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 397,980 கூட்டுத்தொகையான கடன் மீதி தொடர்பாக 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ii) அமைச்சிலிருந்து மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கும், காலி மாவட்ட செயலகத்திற்கும் மற்றும் மதுவரித் திணைக்களத்திற்கும் 1990 மற்றும் 1993 என்ற ஆண்டுகளில் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,690 ஆக இருந்தது. உரிய நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர்கள் உரிய நிறுவனங்களில் சேவைக்கு அறிக்கையிடாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(iii) 2006 ஆம் ஆண்டின் போது சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 58,926 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சின் முகாமைத்துவம் கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கைத்தொழிற் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்திற்கு பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 09 உத்தியோகத்தர்களிடமிருந்து கூட்டு மொத்தமாக ரூபா 175,594 கடன் மீதி நிலுவையாகக் காணப்பட்டது. அந்தக் கடன் மீதி நிலுவை 23 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும், அந்தக் கடன் மீதியை பதிவழிப்பதற்கு அரசாங்க நிதித் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது வீதி பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வினால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சால் அவ்வறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம் அமைச்சர் அலுவலகம், இராஜாங்க அமைச்சர் அலுவலகம், செயலாளரின் அலுவலகம், நிர்வாகப் பிரிவில் ஒரு பகுதி, மகநெகும பிரிவின் ஊடகப் பிரிவு, திட்டமிடல் பிரிவின் ஒரு பகுதி, அறிக்கையிடல் பிரிவு போன்ற பிரிவுகளின் உள்ளபடியான மீதி மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பொருட்பதிவேட்டு புத்தகங்களின் பிரகாரமான மீதி காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகை, பற்றாக்குறை மற்றும் எடுக்கப்பட்ட ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 766 மற்றும் 767 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

வியாபார மற்றும் கடற்படைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கும் வெளிநாட்டுதவி செயற்திட்ட அமைச்சரின் பிரத்தியேக அலுவலகத்திற்கும் ரூபா 1,200,000 பெறுமதியான 10 கணனிகள் 02 வருடங்களுக்கு முன் முறையற்றதாக விடுவிக்கப்பட்டிருந்தது.

(இ) வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்றதாகப் பயன்படுத்துதல்

வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **சொத்துக்களின் வகை** | **சொத்துக்கள் சொந்தமாக இருந்த நிறுவனம்** | **எண்ணிக்கை** | **பெறுமதி** | **காலப்பகுதி** |
| --- | --- | --- | --- | --- |
| | | | **ரூபா** | |
| மோட்டார் வாகனங்கள் | தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, | 01 | காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 03 வருடங்கள் |
| | வீதி அபிவிருத்தி அதிகாரசபை, | 06 | | 05 வருடங்கள் |
| | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, | 02 | | 2½ வருடங்கள் |

(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத 03 வருடங்களுக்குக் குறைவான பொறுப்புக்கள் ரூபா 10,467,221,411 ஆகும்.

## 3.7 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | | |
| 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டம் | - | 1998 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான 17 வருட காலப்பகுதிக்காக அமைச்சிற்குச் சொந்தமான ஜீப் வண்டிக்கு வாகன வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாது வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப் பிரமாணம் 178(3)(ஆ) மற்றும் 264(ஆ) | 194,428 | 2015 ஆம் ஆண்டின் முன் அரைப்பகுதியில் அமைச்சின் அலுவலக வளாகத்தில் காணப்பட்ட செத்சிறிபாய 9 ஆவது மாடியில் பொருத்தப்பட்டிருந்த 09 வளிப்பதனாக்கி இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர் வழங்கியிருந்த பழுதுபார்த்தல் மதிப்பீடு உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருந்த போதிலும், பணக் கொடுப்பனவை உறுதிப்படுத்துகின்ற |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அடியிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட சேவையினை வழங்கிய நிறுவனம் உரிய காசோலை கிடைத்தமையை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |
| | (ii) | நிதிப் பிரமாணம் 754 | 33,035,825 | பொருட் பதிவேடு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை<br>-------------------------------------------------- | | | |
| | (i) | 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3(1) ஆம் பந்தி | - | அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பாவனைக்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்படக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதிலும், அமைச்சர் 06 உத்தியோகபூர்வ வாகனங்களையும், பிரதி அமைச்சர் 04 உத்தியோகபூர்வ வாகனங்களையும் பயன்படுத்தியிருந்தனர். அவ்வாறு எல்லையினை விஞ்சி பயன்படுத்திய வாகனங்கள் தொடர்பான தகவல்கள் நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) | -மேற்படி - 3(2) ஆம் பந்தி | 200,000 | அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணியினருக்கு ஒரு வாகனம் வீதம் 02 வாகனங்கள் மாத்திரம் பெறமுடியுமாக இருந்த போதிலும், அமைச்சரின் பதவியணியினருக்கு 06 வாகனங்களும், பிரதி அமைச்சரின் பதவியணியினருக்கு 08 வாகனங்களும் வீதம் 14 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (iii) -மேற்படி - 3(4) ஆம் பந்தி | - | பிரதி அமைச்சர் பயன்படுத்திய 02 வாகனங்கள் பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது மீளக் கையளிக்கப்படாதிருந்ததுடன், அந்த 02 வாகனங்களுக்காக மாதாந்த கட்டணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

-------------------------------------------------------

| | | |
|---|---|---|
| 2014 பெப்பரவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருக்கவில்லை. |

(உ) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை

---------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.1 ஆம் பந்தி | - | செயற்திட்ட நடவடிக்கைகள் சரியான செயற்பாடு நிலையுடனும், கால ரீதியாகவும் நிறைவேற்றுவதற்கான ஆரம்ப செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பதவியணியினரை சேர்த்துக் கொள்வதற்கு தெற்கு அதிவேக நீடிப்பு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) -மேற்படி - 2.2.2 பந்தி | 555,336 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஒபெக் நிதிய வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் மதியுரையாளர்களுக்காக ஊதியம் மற்றும் போக்குவரத்துப் படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 555,336 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | -மேற்படி - 2.2.3 பந்தி | 2,089,179 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரமின்றி முன்னுரிமை வீதி செயற்திட்டம் - 3 இற்காக இரண்டு மதியுரையாளர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது மாதாந்த படியாகவும் வாகன வாடகையாகவும் ரூபா 1,089,179 தொகை மதியுரையாளர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை<br>---------------------------------------------------- | | |
| (i) | 8.13.4 ஆம் வழிகாட்டி | 827,000,000 | முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் -1 இற்குரிய முரண்பாடுகள், கட்டளை மூலம் அமைச்சின் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெறப்படாமல் ஒப்பந்தக்காரர்களுக்காக ரூபா 827 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. சிறிபோபுர நாற்சந்தியில் வான்பாலம் மற்றும் திரிவானகெட்டிய - அகலவத்த வீதி புனரமைப்பிற்குரிய முரண் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | தேசிய பெறுகைகள் முகவராண்மையினால் 2007 நவம்பர் மாதத்தின் போது விநியோகிக்கப்பட்ட மதியுரைச் சேவைக் கைநூலின் 1.2.1 ஆம் வழிகாட்டி (Consultancy Service Manual) | - | போட்டியாளர் விலை கோரல் முறைமை பின்பற்றப்படாமல், முன்னுரிமை வீதி செயற்திட்டத்தின் - 2 மதியுரைச் சேவைக்கு முரண் கட்டளை மூலம் முன்னுரிமை வீதி செயற்திட்டம் -3 இல் மதியுரை ரீதியான சேவைகளுக்காக 2 ஆலோசனையாளர் கம்பனிகளுக்கு ரூபா 501.23 மில்லியனும், ரூபா 437.62 மில்லியனும் வீதம், ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக முன்னுரிமை வீதி செயற்திட்டம் - 3 இற்குரிய ஆலோசனைக் கட்டணம் 2014 |

| | | |
|---|---|---|
| | | மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 18.82 மில்லியன் மற்றும் ரூபா 76.75 மில்லியன் தொகை முன்னுரிமை செயற்திட்டம் - 2 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |

(எ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை

-----------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) 2007 மே 11 ஆந் திகதிய 09/2007-2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (viii) ஆம் பந்தி | 13,914,117 | ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதன் கீழ் தெற்கு அதிவேக வீதி நீடிப்பு செயற்திட்டத்திற்காக காணிகளைக் கைப்பற்றல் மற்றும் 12 மீளக் குடியமர்த்தும் உத்தியோகத்தர்களைச் சேர்த்து அவர்களுக்கு சம்பளங்கள் மற்றும் போக்குவரத்து / எரிபொருள் படியாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 13,914,117 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2007 மே 11 ஆந் திகதிய 09/2007-2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (viii) ஆம் பந்தி | - | மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட / நியமிக்கப்பட்ட பதவிக்குரிய படிகளில் பிரச்சினைகள் காணப்படுமாயின் தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட வேண்டியிருந்தது. எனினும் தாபனப் பணிப்பாளர் நாயகம் பொதுத் திறைசேரியின் சிபாரிசின் அடிப்படையில் படிகள் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தெற்கு அதிவேக வீதியின் நீடிப்பு செயற்திட்டத்தின் படிகளைத் தீர்மானிக்கும் போது அவ்வாறான முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்க வில்லை. |

## 3.8 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

---------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் 22 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 201 பில்லியனாக இருந்ததுடன் அந்த செயற்திட்டங்களுக்காக ரூபா 182 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்

------------------------------------------------------------------------------------------

தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 07 நிர்மாணங்களுக்கிடையே 03 நிர்மாணங்களுக்குரிய நடவடிக்கைகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக செயல் முன்னேற்றம் 02 செயற்திட்டங்களில் 25 சதவீதப் படியும், எஞ்சிய செயற்திட்டத்தில் 58 சதவீதப் படியும் ஆக இருந்தன.

### (ஆ) செயற்திட்டம் குறித்த திகதியில் ஆரம்பிக்கப்படாமை

------------------------------------------------------------------------------------------

2015 ஆம் ஆண்டின் போது ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிடத்தினதும் விவசாயப் பீடத்தினதும் (கிளிநொச்சி) நிர்மாண நடவடிக்கைகளின் பௌதீக செயல்முன்னேற்றம் மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 சதவீதமாக இருந்தது. றுஹுணு பல்கலைக்கழகத்தின் கலையரங்க நிர்மாணம் பல்கலைக்கழக நகர செயற்திட்டம் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆகிய செயற்திட்டங்களுக்கு ரூபா 881 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் உரிய திட்டங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### (இ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------------

வெளிநாட்டு செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) சவுதி அரேபிய நிதிய வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் கண்டி - யாழ்ப்பாணம் ஏ 09 வீதியில் கட்டுகஸ்தொட்ட முதல் அலவத்துகொட வீதி பகுதியின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துதல் தாமதமானதன் காரணமாக ரூபா 3,578,063 தொகையான தண்டப்பண வட்டியொன்றை செலுத்த வேண்டிய ஏற்பட்டிருந்தது.

(ii) சவுதி அரேபிய நிதிய வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தில் தெஹியோவிட்ட - தெரணியகல வீதி பொருத்தமான பிரகாரம் விரிவான பொறியியலாளர் ஆய்வொன்று மேற்கொள்ளப்படாது அளவிடை பத்திரம் (BOQ) தயாரித்ததன் காரணமாக அவ்வப்போது முரண்களுக்கான கட்டளை விநியோகிக்கப்பட்டமையினால் ரூபா 161,522,204 தொகையான ஆரம்ப கிரயத்தை விஞ்சி செலவினம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

(iii) முன்னுரிமை வீதி செயற்திட்டம் - 1 இன் கீழ் மீளமைக்கப்பட்ட பரந்தன் முல்லைத்தீவு வீதியில் வீதி மேற்பரப்பு குறித்த மாதிரிகளின் பிரகாரம் தார்க் கலவை இடுவதற்கு (Asphall Concrete) நடவடிக்கை எடுக்காமையினால் அதற்காக ரூபா 15 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு செலுத்தாமல் அந்தப்பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(iv) முன்னுரிமை வீதி செயற்திட்டம் - 2 இன் கீழான தென்னேகும்புற றிகில்லஸ்கட - றாகல வீதி மற்றும் பதுளை - கறமெட்டிய - எந்தாஉள்பத்த வீதியின் ஆரம்ப விடயப்பரப்பிற்குள் அடங்காத வெள்ளத்தால் பாதிப்பிற்குட்பட்ட வீதிப் பகுதியின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக முற்பணமாக ரூபா 13.311 மில்லியன் திரண்ட நிதியத்திலிருந்து முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

(v) மேற்கூறப்பட்ட (iv) இல் குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்தின் தென்னேகும்புற - றிகில்லகஸ்கட - றாகல வீதியின் விடயப்பரப்பிற்குரித்தற்ற மதன்வல மஹா விகாரரைக்கு நுழையும் வீதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 17 மில்லியன் கிரயமான முரண் கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 12.87 மில்லியன் அதற்காக செலவிடப்பட்டிருந்தது.

(vi) முன்னுரிமை வீதி செயற்திட்டம் - 2 இற்குரிய கடன் தொகையினை விஞ்சி ஐக்கிய அமெரிக்க டொலர் 14 மில்லியனுக்குச் சமமான ரூபா 1,980 மில்லியன் செலவில் நிறைவேற்றப்பட்ட வேலைக்கான பட்டியல்களைத் தீர்ப்பதற்குத் தேவையான நிதிஏற்பாடு காணப்படவில்லை. அந்தத் தொகையைத் தீர்ப்பதற்கோ அல்லது கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) மேற்கூறப்பட்ட (vi) இல் காணப்படுகின்ற செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெற்றிருந்த ரூபா 1,100 மில்லியன் கடன் தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(viii) வீதி பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் பேராதனை - பதுளை செங்கலடி வீதியின் 3.1 கி.மீ முதல் 09 கி.மீ வரையான வீதிப் பகுதியின் பராமரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒப்பந்தகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களில் 14 விடயங்களின் விலை வீதத்தை பொறியியலாளர் மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்த போது 100 சதவீதம் முதல் 997 சதவீதம் வரையிலான வீச்சில் கிரயம் விஞ்சியிருந்தது. மேலும், அதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ix) நாவற்குளி - காரைதீவு - மன்னார் வீதியில் 67 கி.மீற்றர் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ஆரம்ப நிர்மாண அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் வீதியின் அகலம் 10.2 மீற்றராக இருந்த போதிலும், நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அது 9 மீற்றர் வரை குறைக்கப்பட்டமையின் காரணமாக ஒப்பந்தத்தின் கிரயம் ரூபா 632,582,776 இனால் குறைவடைந்திருந்தது. எனினும், பாதசாரிகள், மோட்டார் சைக்கிளில் செல்வோர் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோரின் பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினையான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரினால் தொழில்நுட்ப மாதிரியில் குறிப்பிடப்பட்ட நியதிகளின் படி நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக எஸ்போல்ட் வீதி மேற்பரப்பை கடினமாக்குதல் (Compaction of asphalt wearing course) செயற்பாடுகள் சில இடங்களில் நியதிகளின் அளவிற்குக் குறைவாகக் காணப்பட்டது. அதனால் அந்த பிரதேசங்களுக்குரிய கொடுப்பனவுகளை குறைப்பதற்கு மதியுரை

பொறியியலாளரினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தமை மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

(x) வடக்கு வீதி புனரமைப்பு செயற்திட்டத்தின் புத்தளம் - மறிச்சுக்கட்டி - மன்னார் வீதி புனரமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் ஆய்வுகூடம், கணனி உபகரணங்கள் மற்றும் அளவிடை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 90,356,378 தொகை இறுதிப்பட்டியலின் படி செலுத்தப்பட்டிருந்தது. இதன் போது அளவிடைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விலையினை விட ரூபா 69,356,378 தொகை அதாவது 33 சதவீதத்திற்கு விலை அதிகரிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் வில்பத்து புனித பூமியில் அமைந்துள்ள 36 கி.மீற்றர் வீதிப்பகுதியின் ஆரம்ப அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டிருந்த 10 பாலங்கள் மற்றும் 05 நடை பாலங்கள் என்பன அகற்றப்பட்டிருந்தன. இவ்வாறான வேலைப் பகுதியைக் கைவிட்டதற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) வறுமை நிலையில் காணப்படுகின்ற கிழக்கின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தில் 100 கி.மீற்றர் வீதிகள் மற்றும் கல்லடி பிரதேசத்தில் புதிய பாலமொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் வெளிநாட்டு ஒப்பந்தகாரருக்கு ரூபா 3,806.08 மில்லியன் தொகையான கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தகாரரால் ரூபா 3,102.88 மில்லியன் தொகை வீதி நிர்மாணங்களுக்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக பாலத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் அரசாங்கக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 813.47 மில்லியன் தொகைக்கு மீண்டும் கையளிக்கப்பட்டிருந்த போதும், நிர்மாணத்தின் இறுதியில் அதற்கு ரூபா 1,113.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செயற்திட்டத்திற்கு ரூபா 409.8 மில்லியன் மேலதிகச் செலவினமொன்றைச் செய்ய வேண்டியயேற்பட்டிருந்தது.

(xii) மேற்கூறப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் விலை முரண்பாடுகள் தொடர்பாக நிபந்தனையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நலிவுகளை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு ஒப்பந்தகாரரால் விலை முரண்களுக்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும்,

செயற்திட்டத்தால் அந்தக் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரால் ரூபா 593,427,982 தொகையான நட்டஈடு கோரி சமரச சபையில் (Arbitral tribunal) வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கின் பிரதிவாதியின் செயற்பாடுகளுக்காக உள்நாட்டு நிதியத்தின் கீழ் ரூபா 3,282,442 தொகை செயற்திட்டத்தால் செலவிடப்பட்டிருந்தது.

(xiii) தெற்கு வீதி இனைப்புச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள், வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் பதவியணியினராலேயே நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் பதவியணியினர்களின் கிரயம் அந்த இரண்டு செயற்திட்டங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.

**(ஈ) செயற்திட்ட நடவடிக்கைகளுக்குப் புறம்பான செயற்பாடுகள்**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நடவடிக்கைகள் 2015 யூன் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 யூலை மாதத்தின் போது ஐக்கிய இராஜ்சியத்தின் பேர்மிங்ஹோம் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிக்காக உத்தியோகத்தரொருவருக்கு பாடநெறிக் கட்டணம் மற்றும் அமையப் படியாக ரூபா 3.02 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. நிதியத்தின் அலுவல்கள் முடிவடைந்ததன் காரணமாக அதன் நலன்களை நிதியத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ii) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், தேசிய பெருந்தெருக்கள் சார்ந்த (மேலதிக நிதியீட்டம்) செயற்திட்டம் மூலம் பெறுமதி சேர் வரிகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு உரிய கால எல்லையில் செயற்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக பெறுமதிசேர் வரியாக பாமங்கட - கெஸ்பேவ வீதியை அபிவிருத்தி செய்யும் வேலைக்காக இலங்கைக் குடியரசின் பங்களிப்பில் ரூபா 27.34 மில்லியன் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) முன்னுரிமைய வீதி செயற்திட்டம் -1 இன் மூலம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ரூபா 41.6 மில்லியன் பெறுமதியான சுசுகி

வகையின் மோட்டார் ஜீப் வண்டியொன்று செயற்திட்டத்தின் பணிப் பொறுப்பிற்கு புறம்பாக முரண் கட்டளை இலக்கம் 05 இன் கீழ் பரந்தன் முல்லைத் தீவு வீதி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த முரண் கட்டளைக்கு அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அக் கொள்வனவுகள் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.13.4 வழிகாட்டியின் பிரகாரம் உரிய அமைச்சு பெறுகைகள் குழுவிற்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் கொள்வனவு செய்திருந்தது.

(iv) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தில் 2015 நவம்பர் மாதத்தில் 10 தினங்கள் பயிற்சியை வழங்குவதற்காக வீதிப் பிரிவு உதவிச் செயற்திட்டத்திற்கு அரசினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் இருந்து ரூபா 2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2015 மார்ச் 15 ஆந் திகதிய எம்ஏ/01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த வெளிநாட்டு பிரயாணங்களுக்குரிய தகவல்கள் நிதி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த பயிற்சி செயற்திட்டங்களுக்கு நேரடித் தொடர்பு இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(v) வீதிப் பிரிவு உதவிச் செயற்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட வீதிகளில் மின்சாரக் கட்டணம், மின் விளக்கு பராமரிப்புக் கிரயம் மற்றும் பாணந்துறை நகரத்தில் வான்பாலத்தில் படிக்கட்டு வசதிகளுக்கான செலவினத்தை தீர்ப்பதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கைக் குடியரசின் நிதிஏற்பாடுகளிலிருந்து பேலியகொடை - புத்தளம் வீதிப் பகுதியில் மின்சாரக் கட்டணத்திற்காக செயற்திட்டம் ரூபா 3.46 மில்லியனை மீளாய்வாண்டின் போது செலவிட்டிருந்தது. மேலும், பாணந்துறை நகரத்தில் வான்பால படிக்கட்டு வசதிகளின் கீழ் மின்சாரக் கட்டணமாக மீளாய்வாண்டின் யூன் மற்றும் யூலை மாதங்களுக்காக கூட்டு மொத்தமாக ரூபா 95,815 தொகை செயற்திட்டம் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது.

(vi) உரிய தேசிய வீதிகள் புனரமைப்பு வேலைகளுடன் தொடர்புடைய ஒப்பந்தகாரர்களை மூலமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்குத் தேவையான ரூபா 14.79 மில்லியன் தொகையான செயன்முறைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் ரூபா 7.70 மில்லியன் தொகையான பொருட்கள் முரண் கட்டளை விநியோகிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தால் பீ.வீ.சீ குழாய் இருப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைப் பயன்பாட்டிற்கு எடுக்காமல் நீர்கொழும்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தது.

(vii) புனரமைப்பு வேலைகள் முடிவடைந்ததன் பின்னர் பொதுவான நடவடிக்கையாக சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வீதியுடன் தொடர்புடைய உதவிச் செயற்திட்டத்தின் தேசிய வீதிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 284 மில்லியன் தொகையான நீர்க்குழாய்களைப் பதிக்கும் வேலைகள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(viii) ஒபெக் நிதிய வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய மாதம்பே முதல் றக்வான வரையிலான வீதியின் நடைபாதை, மதகு மற்றும் பக்கச் சுவர் நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 478,067,716 மற்றும் ரூபா 688,573,450 கிரயங்கள் நிர்மாண அளவிடைப் பத்திரத்தில் (BOQ) காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த விடயத்திலிருந்து முறையே ரூபா 438,070,710 ஆகவும் ரூபா 376,591,085 ஆகவும் திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக அந்த இருவிடயங்களும் முறையே ரூபா 39,997,005 மற்றும் ரூபா 311,982,365 கிரய சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கிரய மதிப்பீடு தயாரிக்கும் போது திறமை மற்றும் நுட்பங்கள் பயன்படுத்தப்படாமையின் காரணமாக இவ்வாறான நிலையொன்று எழுந்திருந்ததுடன் இவ்வாறு சேமிக்கப்பட்ட தொகையிலிருந்து பகுதியொன்று செயற்திட்டத்திற்குப் புறம்பாக மேலதிக செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. உதாரணமாக

ெல்மதுள்ள சுற்றுலா விடுதி மீளமைப்பதற்காக ரூபா 30,012,572 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(உ) நிதியத்தின் பயன்பாடு**

-------------------------------------------

வெளிநாட்டுதவி செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது நிதியத்தின் பயன்பாடு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வேலை நடவடிக்கைகளை திருப்திரகரமானதாக அமுல்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒட்டுமொத்த செயற்திட்ட காலப்பகுதியையும் மேவுகை செய்யும் வகையில் விரிவான ஒட்டுமொத்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் காணப்பட்ட நலிவுகளினால் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க டொலர் ரூபா 15.95 மில்லியன் தொகையான மொத்த நிதிஏற்பாடுகளில் நிதியத்தின் காலப்பகுதியின் இறுதியில் ஐக்கிய அமெரிக்க டொலர் 12.33 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) வீதிப்பிரிவு உதவிச் செயற்திட்டத்தின் 2015 சனவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 47,329.56 இற்குச் சமமான ரூபா 6.2 மில்லியனை மீளப் பெறும் விண்ணப்பத்துடன் போதியளவான தகவல்கள் மற்றும் மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கடன் வழங்குகின்ற நிறுவனம் அத்தொகையை மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

(iii) வீதிப் பிரிவு உதவிச் செயற்திட்டத்தில் மொத்த கடன் உடன்படிக்கை 3 இன் கீழ் செயற்திட்டக் கால இறுதியின் போது சி.எ.உ ரூபா 8,956,010 தொகையான நிதிஏற்பாடு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் கடன் வழங்குகின்ற நிறுவனம் அத்தொகையை இரத்துச் செய்திருந்தது. இதன் காரணமாக 2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 2,303,146.93 தொகைக்குச் சமமான ரூபா 322,434,137 தொகை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கடன் வழங்கும் நிறுவனத்திற்கு மீள அனுப்பப்பட்டிருந்தது.

(iv) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4(i) ஆம் வழிகாட்டிற்கு முரணானதாக முன்னுரிமை வீதி செயற்திட்டம் - 3 கண்டி - யாழ்ப்பாணம் வீதிக்காக ரூபா 252.82 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஊ) சிக்கனமற்ற** கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------

வெளிநாட்டுதவிச் செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 2013 நவம்பர் 01 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தில் தெற்கு அதிவேக வீதி நீடிப்புச் செயற்திட்டத்தில் காணி கைப்பற்றும் செயற்பாடுகள் 26 வாரங்களில் பூர்த்தி செய்வதற்கான ஊக்குவிப்பு வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 மே 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட அந்த நடவடிக்கைகள் 2014 நவம்பர் 19 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், மீளாய்வாண்டு முடிவடையும் வரையிலும் அந்த காணி கைப்பற்றல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக ரூபா 9,861,717 ஊக்குவிப்புப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஒபெக் நிதிய வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தில் காணி கைப்பற்றும் போது காணி உரிமையாளர்களுக்குரிய இழப்பீட்டுப் பணம் செலுத்துதல் 2013 யூன் 10 ஆந் திகதி முதல் 2015 ஒக்தோபர் 19 ஆந் திகதி வரை தாமதப்படுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 475,654 தொகையான மேலதிக வட்டிப் பணமொன்று றம்புக்கன பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(iii) முன்னுரிமை வீதி செயற்திட்டம் - 2 இல் உப கொடுப்பனவு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யும் போது ஏற்பட்ட தாமதத்திற்காக ரூபா 229,267 மில்லியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 393,307,068 தாமத வட்டியுமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(iv) தெற்கு அதிவேக வீதி செயற்திட்டத்திற்கு காணிகளைக் கைப்பற்றுவதற்குரிய இழப்பீட்டுப் பணம் உரிய காலத்தில் செலுத்தப்படாமையினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 384.52 மில்லியன் தாமத வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(எ) அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்**

---

வெளிநாட்டு செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 இன் கீழ் அமுல்படுத்தப்பட்ட ஒப்பந்த வழங்கலின் பெறுமதி ரூபா 25,266 மில்லியன் தொகையான 08 ஒப்பந்தங்களின் ஒப்பந்தத் தொகை ரூபா 32,267 மில்லியன் வரை ரூபா 7,001 மில்லியனால் அதிகரித்திருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த செயற்திட்டங்களின் வேலை பூர்த்தியடைந்திருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இதன் விலை முரண்களுக்காக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நியதிகளின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரகாரம், அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 14 செயற்திட்டங்களுக்காக ரூபா 65,000 மாதாந்த சம்பளத்தில் 54 மதியுரையாளர்களும், ரூபா 25,000 மாதாந்த சம்பளத்தில் 94 மக்கள் இணைப்பு உத்தியோகத்தர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த நியமனங்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிப்பிரமாணம் 71(3) இன் பிரகாரம் புதியதொரு பதவியை ஏற்படுத்துவதற்காக அமைச்சில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவின விடயத்தின் கீழ் அதற்குரிய நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த உத்தியோகத்தர்களின் தேவை தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அந்த பதவிகளுக்காக தேவையான தொழில்சார் தகைமைகள், கல்வித் தகைமைகள், அனுபவங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செயற்பொறுப்புக்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

அந்த நியமனத்தை காரணமாகக் கொண்டு மாதாந்தம் அரசாங்கத்திற்கு ரூபா 5.86 மில்லியன் செலவினமொன்றைச் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

(iii) பிரித்தானிய இரும்புப் பால செயற்திட்டத்தின் 2 ஆம் கட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களுக்கு புறம்பான மேலும் 09 உத்தியோகத்தர்களும் செயற்திட்டத்திற்குச் சேர்க்கப்பட்டிருந்தனர்.

**(ஏ) ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------------------

வெளிநாட்டுதவிச் செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கட்டுநாயக்க வெயங்கொடை வீதியின் மேல்பகுதிக்கு கல், தார் இடல் மற்றும் பராமரித்தலுக்கான ஒப்பந்தம் 2 தொகுதிகளைப் பிரித்து ரூபா 313.4 மில்லியன் மற்றும் ரூபா 267.67 மில்லியன் வீதம் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் 2014 திசெம்பர் 16 ஆந் திகதி ஒப்பந்தகாரர் ஒருவருக்கே கையளிக்கப்பட்டிருந்தது. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 வழிகாட்டிக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கேள்வி கோரல் சரியான இலக்குடன் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ii) வட மாகாண வீதி இணைப்புச் செயற்திட்டத்தில் 2 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான பணி இணைப்பின் அடிப்படையில் வீதி பராமரித்தல் வேலைகளுக்கான சகல ஒப்பந்தகாரர்களும் செயலாற்றல் பிணை முறி மற்றும் அபாயக் காப்புறுதி வழங்க வேண்டியிருந்த போதிலும், அந்தக் காப்புறுதி மேவுகை வழங்கலை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொறியியல் மதிப்பீட்டுடன் கேள்விதாரர்களின் கூறுவிலை மதிப்பீடின்றி ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரர்களினதும் கேள்விகள்

பணி இணைப்பு அடிப்படையில் வீதி பராமரிப்பு வேலைகளை நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தன. அந்த ஒப்பந்தகாரரால் நிறைவேற்ற வேண்டிய நிர்மாணங்கள் எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் மேற்கொள்ளப்படாமையினால் எதிர்பார்த்த காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட கிரயத்தில் வட மாகாண வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதில் சிக்கலான நிலை காணப்பட்டது.

(iv) வட மாகாண வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் கீழ் வவுனியா - ஹொரப்பொத்தான வீதியின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 2015 ஏப்ரல் 28 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் மேலதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கையளித்தல் ஒப்பந்த உடன்படிக்கையின் 10.1 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மேலதிக வேலை தொடர்பாக எந்தவொரு நிபந்தனையும் ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமல் மேலதிக வேலையாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 7,884,878 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(v) ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 4.17 இற்கு முரணாக ஒப்பந்தகாரரினால் பொறியியலாளரின் அனுமதியின்றி 02 பெனுமெடிக் உறுளை (Pneumatic Roller) 02 சந்தர்ப்பங்களின் போது வேலைத்தாக்கத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக 37 நாட்களில் எஸ்போல்ட் இடும் நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 8.17 இன் பிரகாரம் ரூபா 4,919,900 தொகையான தாமதக் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும், வட மாகாண வீதி இணைப்புச் செயற்திட்டத்தால் தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) றிப் றெப் (Riprap) பக்கச் சுவருடன் பிரதேசத்திற்கு ஜியோடெக்ஸ்டைல் (Geo taxtile) துணி இடுவதற்காக ஒரு அலகிற்கு ரூபா 228 வீதம் ரூபா 8,540,250 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் போது துணியிட வேண்டிய சதுர மீற்றர் 9,650 பிரதேசத்தினை விட அதிகரித்துக்

காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 2,200,000 அதிகரித்துச் செலுத்தப்பட்டிருந்தது.

(vii) தேசிய நெடுஞ்சாலைகள் பகுதி (மேலதிக நிதியீட்டம்) செயற்திட்டத்தின் மூலம் சில வீதி அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளின் ஆரம்ப திட்டம் பின்னர் மாற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக மாத்தறை - கொடகம வீதியின் அபிவிருத்தி வேலைகளில் ஆரம்ப அளவிடைப் பத்திரங்களின் உள்ளடக்கப்பட்ட ரூபா 161.73 மில்லியன் அதாவது ஒப்பந்தப் பெறுமதியில் 20.09 சதவீத அளவொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 214 வேலை விடயங்கள் இரத்துச் செய்யப்பட்டு ரூபா 116.57 மில்லியன் பெறுமதியான மொத்த ஒப்பந்தத்தில் 20.5 சதவீத அளவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் புதிதாக 15 வேலை விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அளுத்கம முதல் தெற்கு அதிவேக வீதி வரை வீதி அபிவிருத்தி செய்யும் விடயப்பரப்பில் ரூபா 737.64 மில்லியன் பெறுமதியான அளவிடைப் பத்திரங்களில் 326 வேலை விடயங்கள் இரத்துச் செய்யப்பட்டதனால் ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(viii) அளுத்கம முதல் தெற்கு அதிவேக வீதி மற்றும் ஹிக்கடுவ முதல் தெற்கு அதிவேக வீதிகளில் புனரமைப்பு வேலைகளுக்காக தொடர்புடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து முறையற்ற வேலைத் திட்டம் மற்றும் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர் படையணியின் பற்றாக்குறை போன்ற பலவீனங்கள் கவனத்திற்கு எடுக்கப்படாமல் ஒவ்வொரு ஒப்பந்தகாரருக்கும் 90 நாட்கள் வீதம் காலத்தை நீடிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்ததாக 2015 மே 07 ஆந் திகதி நடைபெற்ற செயற்பாட்டுக் குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் மேற்கூறப்பட்ட வீதிகளில் முறையே ஆரம்ப வேலைக்காக மேலதிக கிரயம் ரூபா 22.51 மில்லியன் மற்றும் ரூபா 26.80 மில்லியன் தொகை மற்றும் விலை முரண்களுக்காக ரூபா 20.33 மில்லியன் தொகை மற்றும் ரூபா 8.53 மில்லியன் தொகைகள் செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக தாமதக் கட்டணம் ரூபா 3.893 மில்லியன் தேசிய நெடுஞ்சாலைகளுடன் தொடர்புடைய (மேலதிக நிதியீட்டம்) செயற்திட்டம் ஈடு செய்திருந்தது.

(ix) தேசிய நெடுஞ்சாலைகள் பகுதி (மேலதிக நிதியீட்டம்) செயற்திட்டத்தின் வேலைகளை குறித்த காலத்தில் ஒப்பந்தகாரருக்கு கையளிப்பதற்கு செயற்திட்டம் தவறியிருந்தமையால் கட்டுகுருந்த முதல் நாகொட வரையான வீதியை அபிவிருத்தி செய்தல் 90 நாட்களினால் தாமதமாகியிருந்தது. அதன் விளைவாக ரூபா 15.19 மில்லியன் விலை முரண்களும் ரூபா 17.31 மில்லியன் தாமதக் கட்டணமும் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(x) தேசிய நெடுஞ்சாலை பகுதி (மேலதிக நிதியீட்டம்) செயற்திட்டத்தில் ஹிக்கடுவ முதல் தெற்கு அதிவேக விதி வரை வீதியை அபிவிருத்தி செய்யும் வேலைகளின் வேலை விடயப்பரப்பிற்குள் உள்ளடங்காத தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் பிரதேச உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பவற்றால் மேற்கொள்ளப்பட வேண்டிய நீர்க்குழாய் வீதி மாற்றங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகளுக்காக செயற்திட்டம் ரூபா 74.82 மில்லியன் தொகையை செலவிட்டிருந்தது.

(xi) தேசிய நெடுஞ்சாலைகள் பகுதி (மேலதிக நிதியீட்டம்) செயற்திட்டத்தில் கீழே குறிப்பிடப்படும் காரணங்களினால் நுகேகொட - ஹோமாகம வீதியை அபிவிருத்தி செய்யும் வேலைகளின் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஒப்பந்த நிபந்தணையின் பிரிவு 4.9 இன் பிரகாரம் ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 28 தினங்களுக்குள் தர முகாமைத்துவ சான்றிதழுக்காக திட்டமுறைமை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஒப்பந்தகாரர் அந்த வேலைப்பகுதியை பூர்த்தி செய்திருக்கவில்லை. மேலும், ஒப்பந்தகாரர் தரக்கட்டுப்பாட்டு பரீட்சகரின் சேவையை பயன்படுத்தாமையினால் 12 செயற்பாடுகளுக்குரிய தர நியமம் பரிசோதனை பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் நியமங்களுக்கு இணங்க பேணப்பட்டிருக்கவில்லை.

- முரண் கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முற்கலவை கொங்கிரீட் மேவுகை (Cover Slab) மற்றும் interlock paving blocks என்பவற்றில் காணப்பட வேண்டிய தாங்கும் சக்தி பரீட்சிக்கப்படாதிருந்ததுடன் அதற்காக முறையே ரூபா 6.27 மில்லியன் மற்றும் ரூபா 1.45 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

- 2015 ஏப்ரல், செப்தெம்பர், ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களின் பரிசோதனை அறிக்கை பெறுபேறுகளின் படி கி.மீ 1+000 முதல் கி.மீ 15 + 360 இல் மேற்கொள்ளப்பட்ட எஸ்போல்ட் கொங்கிரீட் இணைப்பில் காணப்பட வேண்டிய ஆகக் கூடிய தடிப்பம் மி.மீ 35 முதல் மி.மீ 75 வரையான வீச்சில் காணப்பட வேண்டியிருந்த போதிலும், அது மி.மீ. 104.6 முதல் மி.மீ 122 வரையான வீச்சில் காணப்பட்டது. மேலும் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் மேற்கூறப்பட்ட வீதிப் பகுதியில் எஸ்போல்ட் கொங்கிரீட்டின் மேற்பகுதியில் காணப்பட வேண்டிய தடிப்பு மி.மீ. 45 முதல் மி.மீ 55 வரையிலான வீச்சில் காணப்பட வேண்டியிருந்த போதிலும், மி.மீ 91.7 முதல் மி.மீ. 108 வரையிலான வீச்சில் காணப்பட்டது.

- வீதிப் பிரிவு உதவி செயற்திட்டத்தில் பேலியாகொட - ஜாஎல வீதிப் பகுதியின் புனருத்தாபன வேலைகள் மற்றும் தொடர்புடைய 03 மற்றும் 04 தொகுதிகளின் அடிப்படையில் ஒப்பந்தகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களின் பிரகாரம் சில நிபந்தனைகளின் கிழ் ஒப்பந்தகாரரினால் முறையே ரூபா 278.37 மில்லியன் மற்றும் ரூபா 250.1 மில்லியன் கழிவு வழங்கப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்த நிர்வாகத்தின் நலிவுகள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகள் தொடர்பான அனுபவம் இல்லாமையினால் முறையே ரூபா 40.29 மில்லியன் மற்றும் ரூபா 33.36 மில்லியன் கழிவு உரித்தொன்றை மாத்திரம் செயற்திட்ட கால இறுதியின் போது கோருவதற்கு முடியுமாக இருந்தது.

- தேசிய வீதி புனரமைப்பு வேலைகளுக்காக அளவிடைப் பத்திரம் தயாரிக்கும் போது நகரப் பிரதேசங்களில் புவியியல் ரீதியில்

புனரமைப்பு வேலைகளின் அளவிடை உள்ளடக்கி விஷேடமாகக் காணப்படுகின்ற சகல விடயங்களையும் கவனத்தில் கொண்டதன் பின்னர் சாத்தியமான வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அளவிடைப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த சில விடயங்கள் அகற்றப்பட்டு புதிய விடயங்கள் அறிமுகப்பட்டதன் விளைவாக புனரமைப்பு வேலைகள் மதிப்பீட்டுக் கிரயத்தை விஞ்சி ரூபா 1,052 மில்லியன் தொகையான மேலதிக செலவினம் ஏற்பட்டிருந்தது.

- ❖ வீதிப் பிரிவு உதவிச் செயற்திட்டத்தின் கொழும்பு – காலி – அம்பாந்தோட்டை வீதி மற்றும் புத்தளம் - பேலியகொட வீதியின் பகுதியொன்றை புனரமைக்கும் வேலைகள் தாமதித்து பூர்த்தி செய்யப்பட்டமையால் கூட்டுமொத்தமாக ரூபா 485.4 மில்லியன் தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்தல் தாமதமாகியமையால் ஒப்பந்தகாரரின் வளங்கள் வீணாக வைக்கப்பட்டமை மற்றும் இலாபம் குறைவடைந்ததன் காரணமாக பொது மேந்தலைக் கிரயத்தை செய்யவேண்டி ஏற்பட்டமை போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 942.5 மில்லியன் தொகையான கிரயம் கால நீடிப்பிற்கான (Prolongation) உரித்தாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரர்களின் பலவீனத்தின் அடிப்படையில் போதியளவான வளங்கள் பயன்படுத்தப்படாமை, இயந்திர உபகரணங்களின் எப்போதும் செயற்படுத்தப்படாமையினால் வேலை தாமதமானதாக மதியுரையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், தாமதத்திற்கான கட்டணம், கால நீடிப்புக்குரிய கட்டளைகளில் (Prolongation) ஈடு செய்வதற்கு தொழில்நுட்ப மதியுரைக் குழு தீர்மானித்திருந்தது.

- ❖ தெற்கு அதிவேக வீதியில் பின்னதுவ முதல் கொடகம வரையான பகுதிக்குரிய விரிவான வடிவமைப்பு (Detailed Design) உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக உடன்படிக்கைக்குரிய அளவிடைப்பத்திரத்தில் (Bill of Quantities) நிர்மாண அளவு அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஒப்பந்தக் கிரயம் ரூபா 18.700 பில்லியனாக

காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான உள்ளபடியான கிரயம் ரூபா 14.925 பில்லியனாகும். அதன் காரணமாக ரூபா 3.775 பில்லியன் சேமிப்பு ஏற்பட்டிருந்தது.

- ஒன்றிணைந்த வீதி முதலீட்டுச் செயற்திட்டத்தின் கீழ் (i-Road) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் ஒப்பந்தகாரருடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் விஷேட ஏற்பாடுகளின் (Particular Condition) பிரகாரம், ஒப்பந்தகாரருக்கு வேலை ஆரம்பித்தல் முற்பணமாக ரூபா 974,207,579 தொகை மேலதிகமாகக் செலுத்தப்பட்டிருந்தது.

- தெற்கு வீதியை இணைக்கும் செயற்திட்டத்தின் மதியுரைச் செயற்பாடுகளுக்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் விஷேட நிபந்தனையின் பிரிவு இலக்கம் 45.1(அ) இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டுப் பெறுமதி மற்றும் நிச்சயமற்றவைகள் தவிர ஒப்பந்தப் பெறுமதியில் 15 சதவீதம் அதாவது வெளிநாட்டு நிதியில் ஐ.அ.டொலர் 193,782 அதாவது ரூபா 25.37 மில்லியன் மற்றும் உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா 19.37 மில்லியன் தொகையான முற்பணம் செலுத்த வேண்டியிருந்ததுடன் சேவைப்பங்காளர்களினால் சேவைகள் வழங்கிய ஐந்தாம் மாதம் முதல் பன்னிரெண்டாம் மாதம் வரை சமமான 08 மாதாந்த தவணைகளில் அந்த முற்பணம் தீர்க்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம், 2015 நவம்பர் மாதம் வரையிலும் வேலை ஆரம்பிப்பு முற்பணம் முழுமையாக அறவிடப்படவேண்டியுள்ளது. எனினும், வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையான ரூபா 44,756,486 ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் ஆண்டின் இறுதி வரையில் அறவிடப்படாதிருந்த ரூபா 204.51 மில்லியன் தொகை 2015 திசெம்பர் 31 வரையிலும் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக மதியுரையாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேலை ஆரம்பிப்பு முற்பணம் அறவிடப்படாதிருந்த போதிலும், மதியுரையாளரால் மேற்கூறப்பட்ட பணத்தின் 2 ஆம் பகுதிக்காக ஈடுபடுத்தப்பட்ட வங்கிப் பிணை 2015 நவம்பர் 30 ஆந் திகதி காலாவதியாகியிருந்தது.

- பிரித்தானியா இரும்புப்பாலம் செயற்திட்டம் - 2 ஆம் கட்டத்தின் கீழ் ஆரம்ப பாலம் வழங்கும் ஒப்பந்தத்தின் பிரகாரம் 3,077.9 மீற்றர் நீளமான 104 பாலங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தினால் பின்னர் 06 சந்தர்ப்பங்களின் போது பாலம் அமைக்கும் ஒப்பந்தம் மாற்றப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட 06 மாற்றங்களில் 02 மாத்திரம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 04 மாற்றங்களும் பெறுகைகள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

- பிரித்தானியா இரும்புப்பால செயற்திட்டம் - 02 ஆம் கட்டத்தின் கீழ் ஆரம்ப பாலம் அமைக்கும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட 13 பாலங்கள் அகற்றப்பட்டு ரூபா 2,334.29 மில்லியனுக்குச் சமமான பிரித்தானியா பவுண் 10,739,262 கிரயத்தில் பொல்தூவ பாலம் நிர்மாணித்தல் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஏகோபித்த (Unsolicited) பெறுகைகள் நடைமுறைகளைப் பின்பற்றி இந்த ஒப்பந்தமும் கையளிக்கப்பட்டிருந்தது. அதனால் போட்டியாளர் கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றுவதால் பெறப்படுகின்ற நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்டம் தவறியிருந்தது.

- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விஷேட பெறுகைகள் குழுவின் (SCAPC) சிபார்சின் பிரகாரம் மொத்த செயற்திட்ட கிரயத்தில் ரூபா 339,081,600 தொகைக்குச் சமனான பிரித்தானிய பவுண் 1,560,000 கழிவினை வழங்குவதற்கு ஒப்பந்தக் கம்பனியால் இணங்கப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்த உடன்படிக்கையைக் கைச்சாத்திடும் போது நிர்மாண வேலைத்தளத்தில் பாலத்தை இறக்குவதற்கும் ஏற்றுவதற்கும் இணங்கப்பட்ட ரூபா 17,388,800 தொகைக்குச் சமனான பிரித்தானிய பவுண் 80,000 தொகையான சலுகையை நீக்கி எஞ்சிய விடயங்களுக்காக ரூபா 321,692,800 இற்குச் சமமான பிரித்தானியா பவுண் 1,480,000 தொகையான கழிவு மாத்திரம் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## (ஐ) விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்

வெளிநாட்டு செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேல், தென், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் 09 வீதிகளில் கி.மீ 142.73 (மதகு மற்றும் பாலம் உட்பட) புனரமைத்தல் செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்தன. எனினும் ஒப்பந்த மதியுரையாளரின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளுக்குரிய மூலப்பொருள் ரீதியான மூன்று பொறியியலாளர், பிரதிப்பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட பொறியியலாளர் என்போரைச் சேர்ப்பதற்கு முன்னுரிமை வீதி செயற்திட்டம் - 3 இல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை ஒப்பந்தகாரர்களின் வேலைகளின் தரத்தன்மையை மேற்பார்வை செய்வது தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(ii) மத்திய மாகாணத்தின் தேசிய வீதிகளைப் பராமரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 310.36 மில்லியன் தொகை அதற்குரித்தற்ற மத்திய மாகாணத்தின் 38 மாகாண வீதிகளைப் பராமரிப்பதற்காக மீளாய்வாண்டின்போது ரூபா 38.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக செயலகமொன்றை ஸ்தாபித்தல் மற்றும் வீதிப்பராமரிப்பு பணிகள் தொடர்பான கொள்கைத் தீர்மானங்களை எடுத்து மதியுரைச் சேவைகளை வழங்குவதற்காக ரூபா 81.55 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், மதியுரையாளர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட வீதி பராமரிப்பு கொள்கைகள் தொடர்பான சிபாரிசுகள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், மதியுரைச்சேவை உடன்படிக்கை 2014 நவம்பர் 11 ஆந் திகதி முடிவடைந்திருந்தது.

## (ஒ) செயற்திட்ட செயலாற்றல்

வெளிநாட்டுதவி செயற்திட்டங்களின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதிப் பிரிவின் உதவி செயற்திட்டத்தின் சாத்தியவள அறிக்கையின் படி ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதிப்பராமரிப்பு நியமம்/ கைநூலைப் பயன்படுத்தி தெரிவு அடிப்படையில் வீதிப் பராமரிப்பு தொடர்பான தொழில்நுட்ப ரீதியான கணக்காய்வை நடாத்துவதற்காக வீதிப்பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயலகம் தொடர்ச்சியாக செயற்பட வேண்டியிருந்தது. பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளின் பிரகாரம், பராமரிப்பு தொடர்பான தரத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், தொழில்நுட்ப ரீதியான கணக்காய்வு தொடர்பான செயலாற்றல் அறிக்கை வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலைபேறான வீதிப் பராமரிப்பு நிதி மூலமொன்றை வழங்கும் போது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் அதன் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் முறைமையைப் பரீட்சிப்பதற்காக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணிகள் அந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 03 வருடங்களின் பின்னர் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2006 சனவரி 01 ஆந் திகதி முதல் வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியம் செயற்படு நிலையில் காணப்படுகின்ற போதும், அதன் முகாமைத்துவ சபையினால் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2005 ஒக்தோபர் 26 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், 2006 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற வருமானத்தில் பெற்றோல் லீற்றர் ஒன்றிலிருந்து ரூபா 1 உம் டீசல் லீற்றர் ஒன்றிலிருந்து ரூபா 50 சதமும் வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கும் வகையில் அரசினால் ஒதுக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், அந்த முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்காக முறையான நடைமுறையொன்று 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) மன்முனைப் பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் மன்முனை பாலத்திற்கு மின் விளக்குகளை வழங்குவதற்காக உள்நாட்டு நிதியத்தின் கீழ் ரூபா 8,500,956 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாண நடவடிக்கைகளின் மாதமொன்றிற்குப் பின்னர் அதாவது 2014 ஏப்ரல் 19 ஆம் திகதியின் பின்னர் மின் விளக்குகள் செயலிழந்து காணப்பட்டது. அது தொடர்பாக மன்முனை தென்கிழக்கு பிரதேச சபையின் செயலாளரின் கணக்காய்விற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நிர்மாணங்களுக்குரிய நிறுத்தி வைத்தல் பணமான ரூபா 443,424 தொகையான குறைபாடுகள் மீளமைக்கப்படாமல் 2015 நவம்பர் 02 ஆந் திகதி ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) மன்முனைப் பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் கவனத்தில் கொள்ளக்கூடிய வெளிநாட்டுக் கடன் தொகை மற்றும் உள்நாட்டுக் கடன் பணம் என்பவற்றைப் பயன்படுத்தி மன்முனை பாலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக தென்கிழக்கு பருவ மழை காலங்களில் பாலத்துடன் உள்ள வீதி நீரில் மூழ்குவதன் காரணமாக மன்முனை பிரதேசத்தின் மக்களுக்கு பாலத்தை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(vi) பிரித்தானியா இரும்பு பால செயற்திட்டம் - 2 ஆம் கட்டத்தின் கீழ் எரிபொருள் மற்றும் சம்பளங்களுக்காக முறையே ரூபா 40,000 மற்றும் ரூபா 25,000 வீதம் மாதாந்த படி செலுத்தி 05 உத்தியோகத்தர்கள் மதியுரையாளர்களாக செயற்திட்டத்திற்குச் சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும், ஒவ்வொரு பதவிகளுக்காகவும் தேவையான தகைமைகள் மற்றும் ஏனைய அனுபவங்கள் இவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், இந்த உத்தியோகத்தர்களில் அதிகமானோருக்கு செயற்திட்டத்துக்குரிய கடமைகள் கையளிக்கப்படாதிருந்ததுடன் அதன் விளைவாக அவர்களிடமிருந்து எதிர்பார்த்த செயல்முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(vii) மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்கு பொது மக்கள் இணைப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களின்

தகைமைகள் மற்றும் அனுபவங்கள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளைச் செய்து கொள்வதற்குத் தேவையான மட்டத்தில் காணப்படாதிருந்ததுடன் இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து எதிர்பார்த்த செயல்முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

**(ஓ) திட்டமின்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

---------------------------------------------------------------------------

வீதிச் செயற்திட்டங்களை தயாரிக்கும் வசதிகள், செயற்திட்டங்கள் முறையான திட்டத்தின் பிரகாரம் நிதியம் பயன்படுத்தப்படாமையின் காரணமாக செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட டொலர் 15 மில்லியனில் டொலர் 144,810 தொகை கடன் வழங்கும் நிறுவனத்தால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தில் சேமிக்கப்பட்ட டொலர் 15,191 தொகை ரூபா 2,136,446 இற்குச் சமமான தொகை கடன் வழங்கும் நிறுவனத்திற்கு மீள அனுப்பப்பட்டிருந்தது.

**(ஔ) முறையான பிரகாரம் கையளிக்கப்படாத சொத்துக்கள்**

------------------------------------------------------------------------------------------

வீதி உட்கட்மைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தின் ரூபா 1.47 மில்லியன் பெறுதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வட மாகாண வீதி இணைப்பு செயற்திட்டம், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சிற்கு செயற்திட்ட இறுதியின் போது கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களை கையேற்றல் மற்றும் கையளித்தல் பட்டியல் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை.

**(க) கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை.**

----------------------------------------------------------------------------------

வெளிநாட்டுதவி செயற்திட்டம் தொடர்பான சான்றுகள் சமர்பிக்கப்படாமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய நெடுஞ்சாலைகள் பிரிவு (மேலதிக நிதியீட்டம்) செயற்திட்டத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ரூபா 1.59 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 மார்ச் 13 ஆந் திகதிய ஆர்டீஏ/ஏ/10/ஏபீபீரீ ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளில் இல்லாத மதியுரையாளர் ஒருவர் சேர்க்கப்பட்டு செயற்திட்டத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார். சேர்க்கப்பட்ட திகதி முதல் ரூபா 65,000 மாதாந்த படியொன்று மதியுரையாளருக்குச் செலுத்துவதற்கு அதன் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி 2015 ஆம் ஆண்டில் ரூபா 630,410 தொகையான சம்பளம் மற்றும் வாகனப் படிகளும் மதியுரையாளர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்திற்கு மதியுரையாளர்களின் சேவைப் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நாளாந்த வருகை அறிக்கை, வேலை கையளித்தல் பதிவேடு மற்றும் ஆற்றப்பட்ட வேலை அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**(கா) செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல்**

---

வீதிப் பிரிவு உதவிச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி சமர்ப்பிப்பதற்கு உடன்பட்டிருந்த செயற்திட்டத்தின் பூர்த்தி செய்தல் அறிக்கை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அறிக்கை தயாரிப்பதற்காக மேலதிக நிதி ஏற்பாடு ரூபா 2.57 மில்லியன் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(கி) செயற்திட்ட நிதியத்திலிருந்து வரி செலுத்துதல்**

---

தெற்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் மதியுரை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட 2014 திசெம்பர் 14 ஆந் திகதி பெறுமதி சேர் வரியின் அடிப்படையில் வரி விடுவிப்புச் செய்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு விண்ணப்பித்தல் 2015 மே 19 ஆந் திகதி வரை 05 மாதங்கள் தாமதமடைந்ததன் காரணமாக செயற்திட்டத்தினால் பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றுக்காக (NBT) முறையே ரூபா 6,780,082 தொகையும், ரூபா 1,232,742 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

**(கீ) மிகை மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள்**

2013 யூலை 03 ஆந் திகதிய எம்பீஎச்/வைடபிள்யூவை/ஏசீசி/03/03/01 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த பாதீட்டு மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், தேசிய வீதி வலையமைப்பில் ஆபத்துக்களை தடுக்கும் செயற்திட்டம் இலங்கைக் குடியரசின் பங்களிப்பிற்காக மீளாய்வாண்டுக்கான பாதீட்டு மதிப்பீடுகளில் ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 46.42 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மிகை மதிப்பீடு ரூபா 53.58 மில்லியனாக இருந்தது.

**(கு) அறிக்கையிடப்படாத நிதி நட்டம்**

பிரித்தானியா இரும்பு பாலச் செயற்திட்டம் - 2 ஆம் கட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கும் வழங்குனருக்கும் இடையே ஒப்பந்த உடன்படிக்கை ஐக்கிய அமெரிக்க டொலர்களில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் விளைவாக ஐக்கிய அமெரிக்க டொலர் பிரித்தானிய பவுணுக்கு எதிராக குறைவடைந்தமையால் கடந்த 03 வருடங்களுக்காக செலவிடப்பட்ட நட்டம் ஐக்கிய அமெரிக்க டொலர் 892,781 தொகை அதாவது ரூபா 130,506,800 ஆக இருந்தது.

**(கூ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை**

பேஸ்லைன் வீதி செயற்திட்டத்தின் III ஆவது கட்டத்தின் கீழ் கிருலப்பனை முதல் கொழும்பு – ஹொரணை வீதியின் நிர்மாணங்களுக்குரிய காணி கைப்பற்றுவதற்காக துட்டுகெமுனு நாற்சந்தி வரையில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 525.31 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. காணி கைப்பற்றலில் உள்ள தாமதத்தின் காரணமாக கடன் வழங்குகின்ற நிறுவனமொன்றை கண்டுபிடிப்பதற்கு முடியாதிருந்தமையால் வீதியின் நிர்மாண நடவடிக்கைகள் தற்போது வரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 செயலாற்றல்

----------------------

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், மாணவர் விடுதி வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அரசாங்க பல்கலைக்கழக முறைமையில் விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 12,000 இனால் அதிகரிப்பதற்காக ஒரு விடுதிக்காக ரூபா 220 மில்லியன் சராசரியான செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டு பல்கலைக்கழகங்களில் 60 விடுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் உயர்கல்வி அமைச்சினால் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

முதலாவது கட்டத்தின் கீழ் 30 விடுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2013 யூலை 26 ஆந் திகதிய அமப/13/0952/521/041/ரீபிஆர் ஆம் இலக்க அமைச்சரைவத் தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி 30 விடுதிகள் 2015 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் 06 விடுதிகளின் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 06 விடுதிகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 5 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்ததுடன் 18 விடுதிகளின் செயல்முன்னேற்றம் 60 சதவீதத்தை விஞ்சியிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இந்த செயற்திட்டத்தில் ரூபா 10,611.8 தொகையான நிதிசார் முன்னேற்றம் காணப்பட்டது.

மீளாய்வாண்டின் போது தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பில் ''ஏ'' மற்றும் ''பீ'' தரத்தில் கி.மீ. 1,021 அளவான நெடுஞ்சாலைகள் மீள் புனரமைக்கப்பட்டிருந்தது. ''ஈ'' தரத்தில் அதிவேக வீதியில் கி.மீ 8.9 வீதியும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறக்கப்பட்டிருந்ததுடன், ''ஏ'' மற்றும் ''பீ'' தரத்தில் கி.மீ 1,643 அளவான நெடுஞ்சாலைகள் மீள் புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும், 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பிற்குரிய 155 பாலங்கள், மீள புனரமைக்கப்பட்டு சேர்க்கப்பட்டதுடன் 146 பாலங்களின் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்தன.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

----------------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

--------------------------------------------------------------------------------------------------------------------------

(i) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் உயர்கல்விப் பிரிவின் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 20 | 13 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 134 | 61 | 73 |
| (iv) | ஆரம்ப நிலை | 45 | 27 | 18 |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | - | 04 |
| (vi) | 25/2014 இன் படி ஆட்சேர்க்கப்பட்ட | - | 09 | - |
| | **மொத்தம்** | **220** | **129** | **109** |

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நெடுஞ்சாலைகள் பிரிவின் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 20 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 567 | 350 | 217 |
| (iv) | ஆரம்ப நிலை | 35 | 28 | 07 |
| | **மொத்தம்** | **634** | **400** | **234** |